[31st March 1969

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம் பயிரிடப்படுகிறது.

(இ) இதுவரையில் 130 ஹெக்டேர் பரப்பில் செம் மரங்கள் பயிரிடப் பட்டுள்ளன.

Kandamanaickanoor Zamin Forest

* 303 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to lease out the forest areas of former Kandamanaickanoor Zamin area of Madurai district;

(*b*) if so, the number of acres proposed to be leased out; and

(*c*) the number of applicants for leasing?

கண்டமநாயக்கனூர் ஜமீன் பகுதி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்ட கண்டமநாயக்கனூர் முன்னாள் ஜமீன் காட்டுப் பகுதி நிலங்களை குத்தகைக்கு விடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், எவ்வளவு ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(உ) எத்தனை பேர் குத்தகைக்கு நிலம் கேட்டு மனு செய்துள்ளனர் ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) ஆண்டு (உ) இந்த இடத்தில் நில அளவை வேலையும் நில வளவுக்கோடு வரையறுத்தல் வேலையும் நடந்து கொண்டுவருகின்றன. இந்த வேலைகள் பூர்த்தியானவுடன் தான் குத்தகைக்கு விடப்படும் நிலத்தின் பரப்பளவு தெரியவரும்.

Ceylon Naval Crafts

* 304 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Patrol parties of Ceylon touch Rameswaram often;

(*b*) whether it is a fact that they abduct the fishermen fishing in our territorial waters; and

(*c*) if so, the action taken thereon?

இலங்கை ரோந்துப் படையினர்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு- வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இலங்கை ரோந்து படையினர் அடிக்கடி இராமேஸ்வரம் வரை வந்து போகின்றனரா ?

(இ) இவர்கள் நமது எல்லைப் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களை பிடித்துச் செல்வது உண்மையா ?

(உ) ஆமெனில், இதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது ?